# ஆகாத சம்பாஷனைகள் நாவொழுக்கங்களை கெடுத்துப்போடும்

இந்த தலைப்பை வாசிக்கும் போது உனக்குள் ஒரு கேள்வி எழலாம். ஒரு மனிதனுடைய பேச்சுக்கும் அவன் ஒழுக்கத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? ஒரு மனிதனுடைய வார்த்தை எப்படி அவன் ஒழுக்கத்தை கெடுக்க முடியும்? ஆம் இந்தக் கேள்வி உனக்குள் எழுந்தாள் உனக்கானது தான் இந்த மடல்.

உன் உரையாடல்கள் எப்படி உன்னை கறைபடுத்தக் கூடும் என்பதையே இந்த மடல் உன்னோடு பேசப்போகிறது. நம்முடைய நாவில் இருந்து பிறக்கிற வார்த்தைக்கும் நம்முடைய இருதயத்தின் நினைவுகளுக்கும் நெருங்கிய தொடர்ப்பு உண்டு. அதாவது நம்முடைய இருதயத்தின் நினைவுகளில் எவைகளை அதிகமாய் அசை போடுகிறோமோ அவை தான் வார்த்தைகளாய் நாவில் பிறக்கிறது. நாம் எதைக்குறித்து அதிகமாய் பேசுகிறோமோ அதையே அதிகமாய் சிந்திப்போம். எதைக்குறித்து அதிகமாய் சிந்திக்கிறோமோ அதைக் குறித்தே அதிகமாய் பேசுவோம். உதாரணமாக, ஒரு வாலிபன் அவன் நண்பர்களோடு இணைந்து திரைப்படங்களை குறித்தே உரையாடுகிறான் என்றால், அந்த வாலிபன் தனிமையில் இருக்கும் போது நண்பர்களோடு பேசின காரியங்கள் அவன் நினைவில் தோன்றும் அதை நினைவில் அசை போட துவங்குவான். திரைப்படங்களை பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்குள் தோன்றும்.

ஒரு வேளை ஆபாசமான காரியங்களைக் குறித்து அதிகமாய் உரையாடினானால் அப்படிப்பட்ட அசுத்தமான எண்ணங்களே அவன் நினைவலைகளை தாக்கும். பண்டைய காலங்களில் செய்திகளை பரிமாறிக்கொள்ள புறாக்களும் தூதுவர்களும் பயன்படுத்தப்பட்டதற்கு இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. பின்னர் கடிதங்கள், தந்தி, இணையம் என தகவல் தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியினால் இன்று அவை எளிதாகி உள்ளது மாத்திரம் அல்ல துரித்தமாயும் மாறியுள்ளன.

இன்று நம் கரங்களில் உள்ள கைபேசி உலகின் கடைக்கோடியின் உள்ளவனையும் நொடிப்பொழுது தொடர்புகொள்ளும் அளவுக்கு எளிதாக்கியுள்ளது. நட்பு என்பது தான் படித்த பள்ளி, கல்லூரி என்பதை கடந்து உலகெங்கும் ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. இதற்கு இன்றைய சமூக வலைதளங்கள் பெரிய வடிகால்களாக உள்ளன. தங்களை அதிகம்பேர் பின்தொடர்கிறார்கள் (Followers) என்பது இன்றைய இளைஞர்களின் புதுப்போக்காக (Trend) உள்ளது. தோழமை பாராட்டவும், நட்பு கொள்ளவும் நம்மை சுற்றி ஒரு கூட்டம் இருக்கும் போது அவற்றை எல்லாம் முகம் தெரியா நபட்களிடம் நாம் நட்பு பாராட்ட விரும்புவதில்

மறைந்திருக்கும் காரணம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். நம்மை நன்கு அறிந்த நம்மை சுற்றி இருக்கிற நம்முடைய நண்பர்களிடம் வெளிப்படுத்த முடியாத சில உணர்வுகளை சில உணர்ச்சிகளை வெளிப்படுத்த எத்தனிப்பதே. முகம் தெரியாதவர்களிடம் நம்முடைய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதன் மூலமாய் நம்முடைய முகத்திரை கிளிக்கப்படாது என்ற எண்ணமே இதன் ஆணித்தரமான அஸ்திபாரமாகும்.

சில நேரங்களில் நம்மை நேசிக்க யாரும் இல்லை என்ற எண்ணத்தினால் அன்பை தேடும் படலத்தில் தவறி மாயையான அன்பில் அநேகர் விழுவதுண்டு. வலைதளத்தில் உண்மையான அன்பை தேடி வலை விரித்த அநேகருடைய வாழ்க்கைய தப்ப முடியாத சில கன்னி வலைகளில் சிக்கி அழிந்ததுண்டு. சில நபர்கள் அல்லது எதிர்பாலர் மீது நாம் வைக்கக்கூடிய தேவையில்லாத அன்பால் அநேக நேரங்களில் உண்மையாய் நம்மை நேசிக்க கூடிய சில உறவுகளை இழக்க நேரிடும். நம்முடன் கூட கல்லூரியிலோ அல்லது பள்ளியிலோ பயிலக்கூடிய எதிர்பாலர் மீது ஏற்படும் ஈர்ப்பினால் நாம் அநேக நேரங்களில் சில மாயையான அன்பில் சிக்கி, அந்த அன்பில் தொடர்ந்து வளர அந்தக் குறிப்பிட்ட நபரோடு உரையாட அதிகமாய் உந்தப்படுவோம். இதனால் நமக்குள் அந்த அன்பைக்குறித்த எதிர்பார்ப்புகள் அதிகமாகும். அந்த எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாய் மாறும் போது இருதயம் அலைகழிக்கும். இது கோபமாகவோ அல்லது வெறுப்பாகவோ உண்மையாக நம்மை நேசிக்க கூடிய குடும்பத்தினரிடையே வெளிப்படும். இதனால் உண்மையாய் நம்மை நேசிக்க கூடிய சில நல்ல உறவுகளை இழந்து, உதவாத சில உறவுகளின் மீது வைத்த சில உணர்ச்சிபூர்வமான எதிர்பார்ப்புகள் ஏம்மாற்றங்களில் நம்மை தள்ளி ஒரு வெறுமையை நம்மை உணர வைக்கும். சில உணர்வுகளை சில இடங்களில் நாம் கட்டுப்படுத்த தவறுவதினால், மற்ற பிற உறவுகளிடத்திலெல்லாம் நாம் நம்முடைய உணர்ச்சிகளை கட்டுப்படுத்த இயலாமல் வெளிப்படுத்திவிடுகிறோம். பல நேரங்களில் நம்மை நேசிக்கும் உறவுகளிடம் கோபத்தையும், வெறுப்பையும் வெளிக்காட்டி விடுகிறோம். பல நேரங்கில் இந்த வெறுமை சமாதாமின்மை நம்முடைய எதிர் காலங்களை கேள்வி குறியாக்கிவிடுகின்றது. இருதயத்தில் ஒருமனமின்மையால் நம்மால் நம்முடைய படிப்பிலோ பணியிலோ கவனம் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவோம். நமக்குள் வளருகிற சில களைகளை நாம் பிடிங்கிஎறியவில்லை என்றால் நாம் நாட்டப்பட்டுள்ள குடும்பத்தில் இருந்து நாம் நாட்டப்பட்டுள்ள ஸ்தானத்தில் இருந்து நாம் பிடுங்கி எறியப்பட்ட நேரிடும்.

நான் பேசத்தானே செய்கிறேன்,தவறான காரியங்கள் எதிலும் ஈடுபடவில்லையே என்று சொல்லி நாம் நினைக்கலாம், ஆனால் இந்த

உரையாடல்கள் அல்லது சம்பாஷனைகள் நம்மை தவறான பாதைக்கே வழி நடத்தும். தவறான காரியங்களைக் குறித்து சம்பாஷிக்கும் போது அந்த காரியங்களை செய்வதற்க்கே நாம் உந்தப்படுவோம். நாம் எதை செய்தால் அவமானமே மிஞ்சும் என்று நினைக்கிறோமோ அதை குறித்த உரையாடல்களையும் தவிர்ப்பதே சாலச்சிறந்தது. எல்லை மீறும் சில உரையாடல்கள் நாம் நினைத்திராத சில எல்லைகளுக்குள் நம்மை கொண்டு போய் ஒரு நாள் நிறுத்தும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தவறான ஐக்கியங்கள், தவறான உறவுகள், தேவையற்ற சில ஐக்கியங்கள் இவற்றோடு உரையாடுவது நம்மை என்றைக்கும் கறைப்படுத்த காத்திருக்கும் கறைகளே. இவைகள் நம் அன்பிற்கு ஏற்றதோ, நம் உணர்ச்சிகளை வெளிப்படுத்தக் கூடிய தளங்களோ அல்ல. தேவையற்ற நபர்களோடு பேசக்கூடிய தேவையற்ற வார்த்தைகள் முதலாவது நம் இருதயத்தை கறைபடுத்தும் அதன் நீட்சி நம்முடைய ஒழுக்கத்தை கறைபடுத்தும். ஒரு வேளை இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீயும் இதை போன்றதொரு சூழ்நிலையில் சிக்கி இருப்பாய் என்றால் அந்த சூழ்நிலையில் இருந்து உன்னை மீட்க உனக்காகவும் எனக்காகவும் இரத்தம் சிந்தி சிலுவையில் மரித்த இயேசுவால் மாத்திரமே முடியும். இன்று நீ சிக்குண்டிருக்கிற இந்த சூழ்நிலையில் இருந்து மீட்கப்பட விரும்புவாயானால் பின் வரும் வரிகளை இந்த இயேசுவால் என் சூழ்நிலையை மாற்ற முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு வாசிப்பாயானால் உண்மையாகவே இன்று அந்த சூழ்நிலையில் இருந்து மீட்கப்படுவாய்.

ஜெபம்

நல்ல ஆண்டவரே தவறான உரையாடல்கள், தவறான அன்பு, தவறான இடங்களில் என் உணர்வுகளை, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது என்னையும் என் ஒழுக்கத்தையும் கறைப்படுத்தும் என்று உணர்ந்து என் முழு அன்பையும் நேசத்தையும் எனக்காய் ஜீவனையே தந்த உம்மிடத்தில் வெளிப்படுத்த என்னை ஒப்புக்கொடுக்கிறேன். என்னை மீட்க வல்ல இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.